**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 199/2019**

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25–ம் நாள் திட்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 25.082025 | தகப்பனார் பெயர்: | சோமு |
|---|---|---|---|
| பெயர்: | பிரகாஷ் (PW– 2 chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நெப்பத்தூர் | சமயம்: | |
| தொழில்: | கிராம நிர்வாக அலுவலர் | வயது : | 36/2025 |

**வாதி தரப்பில் முதன்மை விசாரணை : 25.08.2025**

நான் தற்போது நெப்பத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அனுப்பப்பட்ட சம்மனில் உள்ள ஆவணங்களை சாட்சியமளிக்க கொண்டு வந்துள்ளேன். புல எண் – 256/2C (புதிய புல எண்– 256/2C1) என்பது ரயத்து புஞ்சை, புல எண் 256/2C2 என்பது ரயத்துவாரி நத்தம் வகைப்பாட்டை சேர்ந்ததாகும். தாவா இரண்டு புல எண்களும் திருத்தப்பட்டதற்கு முன்பு எவ்வாறு இருந்தது என்பதற்கான ஆவணங்களை நான் எடுத்துக்கொண்டு வந்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

1. தாவா சொத்துக்கள் திருத்தத்திற்கு முன்பு என்னவாக இருந்தது என்பது குறித்த தூய நத்தம் அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் (அசலுடன் ஒத்து பார்க்கப்பட்டது) **சா.சா.ஆ.1** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

தாவா சொத்துக்கள் திருத்தத்திற்கு முன்பு யார் யார் பெயரில் இருந்தது என்றால் ரத்தினம் மகன் ஜகதீசன், ரத்தினம் மகன் நாகராஜன், பாலு மகன்

சிவக்குமார் ஆகியோர் பெயரில் இருந்தது.

2. தாவா சொத்துக்கள் திருத்தத்திற்கு பின்பு என்னவாக இருக்கிறது என்பது குறித்த தூய நத்தம் அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் (அசலுடன் ஒத்து பார்க்கப்பட்டது) **சா.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

திருத்தத்திற்கு பின்பு யார் பெயரில் இருந்து யார் பெயருக்கு மாறியிருந்தது என்பது பற்றி கூறலாம் என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண்– 256/2C1 மேற்கண்ட 3 நபர்களிடம் இருந்து தற்போது ஜெயபால் மனைவி கமலா என்ற பெயருக்கு மாறியுள்ளது. தாவா சொத்து சர்வே எண்– 256/2C2 மேற்கண்ட 3 நபர்களிடம் இருந்து தற்போது ஜெயபால் மகன் ராஜேஷ்கண்ணன் என்ற பெயருக்கு மாறியுள்ளது. தாவா சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்பது குறித்த 'அ' பதிவேடு தாக்கல் செய்ய முடியுமா என்றால் செய்யலாம்.

3. நான் தாக்கல் செய்த 'அ' பதிவேட்டின் உண்மை நகல் (அசலுடன் ஒத்துப்பார்க்கப்பட்டது. ) **சா.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

'அ' பதிவேட்டின் படி தாவா சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்றால் 256/2C1 என்பது ஜகதீசன் மற்றும் 2 நபர்கள் பெயரிலும், 256/2C2 என்பது ரயத்து நத்தம் என்பது ஏற்கனவே தாக்கல் செய்த அடங்கல் பதிவேட்டில் உள்ளது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.